REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம். ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : கார்த்திகை 11உ செவ்வாய் (26—11—57) ★ ★ வெளியூர் : கார்த்திகை 12உ புதன் (27—11—57) [இதழ் 141

உணவு தானியக் குழு அறிக்கை

மாநிலங்கள் கருத்தறிய ஏற்பாடு

புதுடில்லி, நவ. 25—

"அசோக மேதா உணவுத் தானிய விசாரணைக் குழுவின் அறிக்கைபற்றி இறுதி முடிவுகளை மேற்கொள்ளுமுன், இது பற்றி மாநிலங்களின் கருத்தறியப்படும்" என்று, உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் மக்கள் சபையில் கூறினர்.

இன்னும் அறிக்கை சர்க்காரின் பரிசீலனையிலிருப்பதாக வும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் சபையா? இந்தி வகுப்பா?

உணவு நெருக்கடிக்குக் காரணம் என்ன?

பம்பாய் அமைச்சரின் குற்றச்சாட்டு

பம்பாய், நவ. 25—

"வியாபாரிகளிடம் உணவுத் தானிய விற்பனையை ஒப்படைத்திருப்பதே உணவு நெருக்கடிக்குக் காரணமாகும்" என்று, பம்பாய் உணவு அமைச்சர் திரு. காசி குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் வியாபாரிகள் நன்மை செய்யவில்லை என்றும், அதற்குக் காரணம் அவர்களின் இலாப நோக்கமே என்றும் அவர் வர்ணித்துள்ளார்.

பதுக்கலில் ஈடுபடுவதும், விலையேற்றத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் அவர்களின் இலட்சியமாக உள்ளது என்றும் அவர் கண்டித்துப் பேசியுள்ளார்.

பம்பாய் மாநிலத்தில் 12 இலட்சம் டன் உணவுத் தானியப் பற்றாக்குறை உள்ளது என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

சமீபத்தில் வெளியான மேதா குழு அறிக்கையில், பம்பாயின் பற்றாக்குறை மதிப்பீடு 17 இலட்சம் டன் என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மதுவிலக்கு வெற்றிபெற!

மக்களின் ஒத்துழைப்பு கேட்கிறார் மத்திய மந்திரி

குடிப்பழக்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு மக்கள் தங்களின் முழு ஒத்துழைப்பையும் தருமாறு மத்திய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் வேண்டுகோள் விடுத்திருக்கிறாராம்.

'எந்தவகையான போதையும் இந்தியாவில் ஒழுக்கக்கேடானது' என்று கருதப்பட்டு வந்திருப்பதாயும், எனவே, குடிப்பழகத்தை எல்லா வழிகளாலும் ஒழிக்க வேண்டும் என்றும் அவர் கூறினாராம்!

தென்னாட்டு உறுப்பினர் மீது நிர்ப்பந்தம் ஏன்?

மொழியல்ல—விஷயமே முக்கியம்

வடவரின் வெறிக்கு சபைத் தலைவர் கண்டனம்

புதுடில்லி, நவ. 25—

மக்கள் சபையை இந்திப் பள்ளி வகுப்பாக்காதீர் என இந்தி வெறியர்களுக்கு மக்கள்சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

உதவி உணவு மந்திரி ஏ. எம். தாமஸ், இந்தியில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு ஆங்கிலத்தில் பதிலளித்த போது, ஒரு உறுப்பினர் எழுந்து, 'இந்திக் கேள்விக்கு ஆங்கிலத்தில் பதிலளிப்பது முறையா' என்று ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினாராம்!

உடனே டி. பி. கார்மார்கர் எழுந்து, 'கனம் உறுப்பினரே ஒழுங்குப் பிரச்சினையை ஆங்கிலத்தில்தான் எழுப்பினார்' என்று கூறியிருக்கிறார்.

சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், முதலில் கண்டவாறு எச்சரித்து விட்டு, "இந்தி வேகமாகப் பரவவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; ஆனால், அதற்காக தென்னாட்டு உறுப்பினர்மீது எந்தவித நிர்ப்பந்தமும் கொண்டுவருவதை நான் எதிர்க்கிறேன். நாம், இந்த மொழி-அந்த மொழி என்று கூறிக்கொண்டிருக்கத் தேவை இல்லை; முக்கியமானது எல்லாம், விஷயம் எல்லா உறுப்பினர்களுக்கும் புரியவேண்டும் என்பதுதான்" என்றும் இடித்துரைத்திருக்கிறார்!

ஆட்சி மொழியாக இந்தி: எதிர்க்கட்சிகளின் கருத்தறிய சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, நவ. 26—

ஆட்சி மொழிக் குழுவின் சிபாரிசுகளைப் பரிசீலிப்பதற்காக நாளை 27-ந் தேதியன்று, சட்டசபையில் உள்ள எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் கொண்ட மாநாடு ஒன்றினை சர்க்கார் நடத்துகிறது.

ஆட்சி மொழி பற்றி எதிர்க்கட்சிகளின் கருத்தை அறிந்து கொண்டு, பின்னர் தங்களின் கருத்தை உருவாக்கி, மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைக்க சர்க்கார் உத்தேசித்துள்ளதாம்.

வட்டார மொழியில் இந்திச் சொற்கள்!

டெல்லி சர்க்கார் பட்டியல் தயாரிக்கிறதாம்

புதுடில்லி, நவ. 25—

இந்தி மொழியிலும், இதர மொழிகளிலும் பொதுவாக வழக்கத்திலிருக்கும் சொற்களடங்கிய பட்டியல்களை மத்திய கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி இலாகா தயாரித்துள்ளதாம்!

இந்தியிலும் வங்காளியிலுமாக வழங்கும் சொற்கள்கொண்ட பட்டியல் ஏற்கனவே வெளிவந்துவிட்டது என்றும், இப்போது தமிழ், மலையாளம் ஆகியவற்றின் பட்டியல் வெளியிடப்படுகிறது என்றும், இனி இதர மொழிகளிலும் மேற்கண்டவகைப் பட்டியல் வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

'போதனு மொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும்'

மாநில டாக்டர்கள் மாநாடு தீர்மானம்

கோவை, நவ. 25—

"நமது நாட்டினுடைய—உலகக் கல்வி—விஞ்ஞான—இலக்கிய முன்னேற்றத்தைக் கருதி—உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், போதனு மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டும்"

என்று, மாநில டாக்டர்கள் மாநாடு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நாகர்களுக்குத் தனி மாநிலம்

மக்கள் சபையில் மசோதா நிறைவேற்றம்

நாகர்களின் தனி கலாச்சாரத்தைப் பாதுகாக்க அவர்களுக்கு உதவுவதே சர்க்காரின் நோக்கமாம்

புதுடில்லி, நவ. 25—

நாகர்களுக்கெனத் தனி மாநிலம் அமைத்துத்தரும் மசோதா ஒன்றினை இன்று மக்கள் சபை நிறைவேற்றியுள்ளது.

'நாகமலை துயன்சாங் பிரதேசம்' என்று அழைக்கப்படும் இந்த மாநிலத்தில், இதுவரை அசாம் மாநில சர்க்காரின் நிர்வாகத்திலிருந்த நாகமலை மாவட்டமும், வட கிழக்கு எல்லைப்புற ஏஜென்சியின் நிர்வாகத்தில் இருந்த துயேன் சாங் எல்லைப்புறப் பிரிவும் அடங்கும்—(இந்த துயேன் சாங் பிரிவு, குடியரசுத் தலைவரின் பிரதிநிதியான அசாம் கவர்னரின் ஆளுகையிலிருந்தது)

இப்போது புதிய மாநிலத்திற்கும் அசாமுக்கும் உள்ள தொடர்பு ஒரே போது கவர்னர் என்ற அளவுடன் சரி!

இந்த நிர்வாக அமைப்பு, நேரடியாக மத்திய சர்க்காரின் வெளிவிவகார இலாகாவினர் நிர்வாகத்தில் இருக்கும் என்று மசோதாவில் கூறப்படவில்லை.

மசோதாவை, வெளிவிவகார இலாகாவேகூடக் கொண்டு வரவில்லை என்பதுடன், உள்நாட்டு மந்திரிதான் மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்.

பண்டித பந்த் பேசுகையில், பண்டித நேரு, கோகிமா மாநாட்டுப்பிரதிநிதிகளுடன் பேசுகையில், நாக நாடு, வெளிவிவகார இலாகாவின் நேரடி நிர்வாகத்தில் இருக்கவேண்டும் என்ற அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக ஒப்பினார் என்றும், அதன்படி அந்த ஏற்பாடு அமலில் இருக்கும் என்று கூறியிருக்கிறார்.

"நாகர் நாட்டைப் பொறுத்து சர்க்காரின் பொறுப்பு இருவகைப்பட்டதாக இருந்தது; ஒன்று—இந்தியாவின் எல்லைப் புறங்களைப் பாதுகாப்பது; மற்றொன்று—நாகர்கள் தங்களின் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்துக்கொள்ளவும், அதேபோது, நவீனகால விஞ்ஞானத் தொழில்துறை முன்னேற்றத்தைப் பெறவும் உதவுவது"

என்றும், பண்டித பந்த் குறிப்பிட்டதுடன், பண்டித நேரு, தன்னை கடந்த செப்டம்பர் திங்களில் சந்தித்த நாகர் தூதுக் குழுவிற்குத் தந்த உறுதி மொழிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்றும், என்றாலும், அவரது வேண்டுகோளுக்கு இணங்க, இன்னும் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் நாகர்கள் முன்வரவில்லை என்றும், ஒருவேளை அவர்கள், 'புதிய மாநிலம் உண்மையில் அனுபவ சாத்தியமாகட்டும்' என்று காத்திருக்கிறார்கள்போல் தெரிகிறது என்றும், இப்போது மாநிலம் அமைவதை ஒட்டி, அவர்கள் தங்களின் நலன்களுக்குப் பாதுகாப்பு எங்கே என்று தெரிந்துகொள்ளுவார்கள் என நம்புவதாகவும் கூறியிருக்கிறார்.

மசோதாவினை, எதிர்க்கட்சியினர் பலரும் ஆதரித்துள்ளனர். மசோதா நிறைவேறியுள்ளது.

பெரியார் திருச்சியில் கைது!

மூன்று நாள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவு

திருச்சி, நவ. 25—

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் இன்று மாலை புத்தூரில் உள்ள அவரது மாளிகையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

நவ. 26-ந் தேதி அரசியல் சட்டப் புத்தக நகல்களை எரிப்பது என்று திராவிடர் கழகம் முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

திருச்சி மாவட்ட போலீஸ் அதிகாரி கி. பி. கோ. 151-வது பிரிவின்படி பெரியார் அவர்களைக் கைது செய்து, 'அடிஷனல்' முதல் வகுப்பு நீதிபதியிடம் அழைத்துச் சென்றார்.

நீதிபதி, பெரியார் அவர்களை, மூன்று நாளைக்கு திருச்சி சிறையில் காவல் வைக்குமாறு உத்தரவிட்டார்.

ஜாமீன் ரத்து மனு தள்ளுபடி

பெரியாருக்குத் தரப்பட்டுள்ள ஜாமீனை ரத்து செய்யவேண்டும் என்றும், எதற்காக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதோ அந்த வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிறவகையிலேயே பெரியார் தொடர்ந்து பேசிவருகிறார் என்றும், எனவே, அவரை மீண்டும் கைது செய்யவேண்டும் என்றும் சர்க்கார் வழக்கறிஞர், செஷன்ஸ் நீதிபதியிடம் முறையிட்டார்.

பெரியார் அவர்கள், தான் அவ்வாறு பேசவில்லை என்றும், 'பார்ப்பனர்களைக் குத்துங்கள்—வெட்டுங்கள்' என்று நான் எவரையும் தூண்டவில்லை என்றும், வழக்கு முடியும்வரை அவ்வாறு பேசுவதில்லை என்றும் கூறி ஒரு வாக்கு மூலம் தந்தார்கள்; அதன் பேரில், சர்க்கார் வழக்கறிஞரின் மனுவை நீதிபதி நிராகரித்தார்.

சென்னையின் உணவுப்பற்றுக்குறை

மத்திய சர்க்கார் தந்த அரிசி விவரம்

புதுடில்லி, நவ. 25—

இந்த ஆண்டில் கடந்த பத்து மாதங்களில் சென்னையின் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக 60,400 டன் அரிசி மத்திய சர்க்கார் தந்தது என்றும், நவம்பர்-டிசம்பர் திங்களில் 4,000 டன் வீதம் தர உத்தேசித்திருப்பதாகவும் மக்கள் சபையில் உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் தெரிவித்திருக்கிறார்.

மேலும், மாதம் 7,000 டன் வீதம் கோதுமையும் தரப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—11—57 செவ்வாய்

ஆக்கமா? அழிவா?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சென்ற பதினெட்டுத் திங்களாக செயல்பட்டு வருகின்றது. அந்தத் திட்டத்தை இந்தியப் பேரரசு வெளியிட்டவுடனே, அந்தத் திட்டத்தில் கண்டுள்ள ஏற்பாடுகள் அனைத்தையும் ஐந்தாண்டு காலத்துக்குள் நிறைவேற்றுவது கடினம் —திட்ட ஏற்பாடுகள் இந்தியப் பேரரசின் நிதி நிலைமைக்கு மீறியதாகும் — என்றெல்லாம் உண்மை தெரிந்தவர்கள் தெரிவித்தனர்.

அந்த அறிவுரைகளைக் கேட்டுத் திருந்தவேண்டிய இந்தியப் பேரரசோ, அவர்கள் சொல்லைக் கண்டு சீற்றம் கொண்டது; அவர்களைக் கேலி செய்யவும் முன்வந்தது.

ஆனல், திட்டத் துவக்கத்தில் எதிர்பார்த்ததுபோல், திட்ட ஏற்பாடுகளுக்குத் தேவைப்படும் பெருந்தொகையை எதிர்பார்த்தபடி பெறுவது முடியாது என்பதை இந்தியப் பேரரசு காலப்போக்கில் தெளிவாகத் தெரிந்துகொண்டது. தெரிந்துகொண்ட பின்னரும்கூட, திட்டத்தின் கால அளவை நீடிக்கச் செய்யவோ, திட்டத்தில் கண்டுள்ள இன்றியமையாத் தேவையாக இல்லாத ஏற்பாடுகளைத் தள்ளிப்போடவோ இந்தியப் பேரரசு விரும்பவில்லை; என்றும்போல் பிடிவாதமாகவே பேசிவந்தது.

இரண்டாவது திட்டத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு உதவியைத் தேடிப் பெற்றுவருவதற்காக இந்தியப் பேரரசு தனது நிதி அமைச்சரை அனுப்பிவைத்தது. அவரும் முழு நம்பிக்கையுடன்தான் தனது வெளிநாட்டுப் பயணத்தைத் துவங்கினர். ஆனல், தனது வெளிநாட்டுப் பிரயாணத்தின் நோக்கம் துளியும் நிறைவேருது, வெறுங்கையுடன் வீடு திரும்பினர்.

அதன்பின்னர், மீண்டும் இரண்டாவது திட்ட ஏற்பாடுகளில் பலவற்றை வெட்ட வேண்டும்—திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை ஏற்பாடுகள் சிலவற்றைத் திருத்தி அமைக்கவேண்டும் என்றெல்லாம் பேச்சு கிளம்பலாயிற்று. இவ்வாறு பேசத் துவங்கினவர்கள், திட்டத்தின் துவக்கத்தில் பேசின அதிகாரச்சார்பற்றவர்களல்லர்; நேரு அமைச்சரவையில் அலங்காரப் பதுமைகளாக வீற்றிருக்கும் அமைச்சர்களே யாவர்.

இரண்டாவது திட்டம் பற்றி மக்கள் சபையில் விவாதம் நடைபெற்றது. அவ்விவாதத்தின்போது இந்தியப் பிரதமர் பேசியிருக்கின்றர். அவர் எப்பொழுதும்போலவே, திட்டத்தின் அடிப்படைப் பகுதிகள் கைவிடப்படமாட்டாது—எப்படியும் அவைகள் குறிப்பிட்டகால அளவுக்குள் நிறைவேற்றப்பட்டே தீரும் என்று வீரச்சுவை சொட்டச் சொட்டப் பேசியிருக்கின்றர்.

அதே விவாதத்தின்போது பேசிய நிதி அமைச்சரோ, திட்டத்தில் இடம் பெற்றுள்ள எரி மின்சார ஏற்பாடுகளும், செயற்கை உர உற்பத்தி ஏற்பாடுகளும் கைவிடப்படக்கூடும் என்று, சற்றுத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றர். கைவிடப்படக்கூடும் என நிதி அமைச்சர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள எரி மின்சார ஏற்பாடுகளோ, உர உற்பத்தி ஏற்பாடுகளோ தென்னகத்தைச் சேர்ந்தவை அல்ல.

இரண்டாவது திட்டத்தில் தென்னகத்திற்குக் கிடைத்துள்ள பெரும்பேறு எல்லாம் நெய்வேலித் திட்டம் ஒன்றுதான். அத்திட்டத்தில் இடம் பெற்றுள்ள எரி மின்சார உற்பத்தி ஏற்பாடு, இரண்டாவது திட்ட காலவரையறைக்குள் இடம் பெற்றிருக்கவில்லை. எனவே, நிதி அமைச்சர் தெளிவுபடச் சொன்னலும், சொல்லாமற்போனலும் பாதிக்கப்பட இருப்பது தென்னகம் அல்ல.

இருந்தாலும், தென்னகம் முதல் திட்டத்திலேயே இந்தியப் பேரரசால் வேண்டுமென்றே கைவிடப்பட்டு இருக்கிறது. இரண்டாவது திட்டத்திலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி ஏற்பாட்டைத் தவிர, வேறு குறிப்பிடத்தகுந்த ஏற்பாடு எதனையும் தென்னகத்திற்கு இந்தியப் பேரரசு ஒதுக்கவில்லை.

திட்டத்தின் நோக்கம் பற்றிய விளக்கத்திலோ, பலம் குன்றியவர்களுக்கும் பின்தள்ளப்பட்டுக் கிடப்பவர்களுக்கும் வளம் பெறுவதற்குரிய ஒத்த வாய்ப்பையும், இந்தியத் துணைக் கண்டப் பகுதிகள் அனைத்தையும் தொழில் வளமடைய எந்தத் தன்மையையும் உருவாக்குவதேயாகும் எனக் கூறப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், செயலளவில் தென்னகம் ஒதுக்கப்பட்டே உள்ளது.

போதிய நிதி வசதி கிடைக்காத காரணமாக, திட்ட ஏற்பாடுகளை வெற்றிகரமாக முடிக்க மாநில ஆட்சிகள் மேலும் மேலும் வரிகளைப் போட்டு பணம் திரட்டவேண்டும் என்று நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். இவ்வாறு கூறிடும் இதே நிதி அமைச்சர்தான், வரிகளைத் தாங்கிக்கொள்ளக்கூடிய நிலையில் இந்தியத் துணைக்கண்டத்தில் மக்கள் இல்லை என்று, ஏற்கனவே கண்ணீர் சிந்தியும் உள்ளார் என்பது சிந்திக்கத்தக்கது.

திட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு என்று இதே நிதி அமைச்சர் போட்ட புது வரிகளின் காரணமாக, பொருள்களின் விலை உயர்ந்திடலாயின. அவ்வுயர்வின் காரணமாக, திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகையின் அளவும் முன்னிலும் கூடுதலாக உயர்ந்துவிட்டது.

இந்த உண்மை தெரிந்திருந்தும்கூட நிதி அமைச்சர், திட்டத்திற்காக மாநில ஆட்சிகள் மேலும் வரிபோட வேண்டும் என்று போதிப்பது விசித்திரமாகத்தான் இருக்கிறது. இதன் விளைவாக, திட்ட ஏற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றனவோ இல்லையோ, திட்டத்தின் பணத் தேவை மட்டும் நிச்சயமாக உயர்ந்துவிடும் என்பதில் துளியும் ஐயமில்லை.

'இரும்படிக்கின்ற இடத்தில் ஈக்கு என்ன வேலை' என்பது பழமொழி. அதுபோலத்தான், இரண்டாவது திட்ட ஏற்பாடுகள் அனைத்தையும் ஒன்றுவிடாது அப்படியே நிறைவேற்றினலும் அல்லது சிலவற்றை மட்டும் நிறைவேற்றினலும், தென்னகத்திற்கு அதனல் புதிதாக ஏற்பட இருக்கின்ற ஆக்கமோ அழிவோ எதுவுமில்லை. தென்னகத்தின் தேய்வு, இந்தியப் பேரரசால் என்றே தீர்மானிக்கப்பட்டுவிட்ட முடிந்த முடிவாகும் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

'அறிவுடன் நேர்மையும்வேண்டும்'

எஸ். இராதாகிருட்டினன் வற்புறுத்தல்

ஜெய்ப்பூர், நவ. 25—

"இந்திய மக்களுக்கு தற்போது தேவைப்படுவது நாணயம்தான்; நம்மிடையே அறிவாளிகள் நிறைய இருக்கலாம்; ஆனல், நாணயமுள்ளவர்கள் ஒரு சிலர்தான்" என்று இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் இங்கு கூறியுள்ளார்.

'சாண்' வயிற்றுத் தொல்லை இல்லை!

ஐதராபாத், நவ. 25—

ஜைன மதத்தினரின் முக்கிய இடமான குர்பாகில் உள்ள ஒரு செடியின் இலையைப் பறித்து உட்கொண்டால் 12 நாட்களுக்குப் பசியே இருக்காதாம்.

ஆந்திர மாநில வைத்தியர் மாநாட்டில் ஒரு அதிசய வேர் வைக்கப்பட்டுள்ளதாம்; இதை உட்கொண்டால் ஏழு நாட்களுக்குப் பசி இருக்காதாம். இதற்கு 'துறவி உணவு' என்று பெயராம்! டாக்டர் பட்டாபி சீதாராமைய்யா இதைச் சாப்பிடப் போகிருர் என்றும் கூறப்படுகிறது.

உயர் நீதிமன்ற அலுவலகத்தை

அழகுபடுத்த!

தமிழ் நாட்டின் உயர் நீதிமன்ற அலுவலகத்தை மேலும் அழகுபடுத்துவதில் பதிவாளர் மிகவும் கவனம் செலுத்திவருகிருர்.

தற்காலிகக் கவர்னர் பி. வி. ராஜமன்னர், கடந்த வெள்ளியன்று உயர் நீதிமன்றம் வந்தார்.

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும், இதாரும் வரவேற்றனர்.

கவர்னர், நீதிபதிகள் நுழையும் வாயிலருகே செடி ஒன்றை நட்டனர். தொடர்ந்து தலைமை நீதிபதியும், இதர நீதிபதிகளும் ஒவ்வொரு செடிநட்டனர் என்று தெரியவருகிறது.

'அகதிப் பிரச்சினை'

தென்னட்டிலும் ஏற்பட்டுவிடும்?

ஐதராபாத், நவ. 25—

இலங்கையிலுள்ள இந்தியர்களின் குடியுரிமை பற்றி இந்திய அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்காவிட்டால், தென்னிந்தியாவில் ஒரு 'அகதிப் பிரச்சினை' ஏற்பட்டுவிடும் என்று ஜனசங்கத் தலைவர் எச்சரித்துள்ளார்.

வாழ்க்கை செலவுப்புள்ளி

சென்னை, நவ. 24—

நவம்பர் 9-ந் நாளுடன் முடிந்த வாரத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவு 1 புள்ளி உயர்ந்து 384 ஆகியது. காய்கறி, இறைச்சி, தேங்காயெண்ணெய் ஆகியவைகளின் விலை உயர்வே இதற்குக் காரணம்.

உடன்கட்டை ஏறும் கொடுமை!

உடந்தையாயிருந்ததாக ஐந்து பேர் மீது வழக்கு

கணவன் இறந்ததும், அவனது தலையை மடிமேல் வைத்துக்கொண்டே உடன்கட்டை ஏறும் சம்பவங்கள் வடநாட்டில் அவ்வப்போது இன்னும் நடைபெற்று வருவது பற்றி செய்திகள் தரப்படுகின்றன.

ஜோத்பூர் மன்னரின் அரண்மனையில் பாதுகாவலராயிருந்த பிரிகேடியர் ஜபார்சிங் என்பார் 1954 அக்டோர் 18-ந் தேதி இயற்கையெய்தினர் என்றும், மறுநாள் அவரது சடலம் எரிக்கப்பட்டபோது அவரது மனைவி சுகன் குன்வார் என்பாரும் உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்துக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சதிக்கு உடந்தையாக இருந்ததாக ஐந்து பேர்கள் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

ஏற்றுமதியாளருக்கு ஊக்கமளிக்க

இந்த ஏற்பாடாம்!

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்குத் தேவைப்படும் வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்யும்போது விதிக்கப்படும் கட்டணத்தை இந்திய அரசாங்கம் தள்ளுபடி செய்துள்ளது.

இதன் மூலம் ஏற்றுமதியாளருக்கு ஊக்கமளிக்கப்படலாம் என்றும் கருதப்பட்டுள்ளது.

இதேபோன்று சுங்க வரியையும் தள்ளுபடி செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றனவாம்.

இனி சைக்கிள் இறக்குமதிக்கு

அவசியமில்லையாம்!

புதுடில்லி, நவ. 24—

இந்தியாவில் தயாராகக்கூடிய சைக்கிள்களின் உற்பத்தி மதிப்பீட்டையும் இறக்குமதியாகியுள்ள சைக்கிள்களின் கையிருப்பையும் கவனிக்கும்போது சைக்கிள்களை இறக்குமதி செய்வது அவசியமாக இராதென்று மக்கள் சபையில் கூறப்பட்டிருக்கிறது.

'மந்திர சக்தி' என்னும் பேரால்

மருந்து விற்பனை

தடை செய்ய சட்டம் அமுலாகும்

'அற்புத நிவாரணி — அபூர்வ மருந்து' என்னும் பேரால் வெளியிடும் விளம்பரங்களை ஆட்சேபகரமானதாக ஆக்கும் சட்டத்தை அமுலாக்குவதென்று சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அந்தச் சட்டம் 1954-ம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தால் இயற்றப்பட்டது. சிற்சில வகை மருந்து விளம்பரங்களைக் கட்டுப்படுத்த வேண்டும், 'மந்திர சக்தி' என்னும பேரால் நிவாரணமளிப்பதாகக் கூறும் விளம்பர வகைகளைத் தடை செய்ய வேண்டும் என்பது அதன் நோக்கமாகும். 1955 ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து இந்தச் சட்டம் அமுலிலிருந்தபோதிலும், இந்த மாநிலத்தில் பூரணமாக அது அமுலாக்கப்படவில்லை.

இந்தச் சட்டப்படி, மருந்து சம்பந்தப்பட்ட எந்த விளம்பரத்தையும் அச்சிடவும், வெளியிடவும் அரசாங்கத்தின் அனுமதியை முன்கூட்டி பெற்றிருப்பது அவசியம்.

வேலை நிறுத்தத்தால் ஏற்பட்ட கால நஷ்டம்

புதுடில்லி, நவ. 24—

1957 ஜனவரி முதல் அக்டோபர் வரை பாங்கி ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தங்கள் காரணமாய் 1,81,548 நபர்—நாட்கள் வேலை நஷ்டம் ஏற்பட்டதாம்!

வடநாட்டுத் திட்டம் வளருகிறது!

பிலாய் உருக்குத் தொழிற்சாலையில் பெரிய இரும்பு பாளங்களை வெட்டுவதற்கென ஒரு பெரிய இயந்திரம் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டுள்ளதாம்.

உலோகக் கலவைக்கான இயந்திரமும், உருகிய இரும்பை வார்ப்பதற்கான இயந்திரமும் அங்கு தயாரிக்கப்பட்டு வருகிறதாம்.

ரூ. 42 இலட்சம் செலவில்

நெடுஞ்சாலைத் திட்டம்

புதுடில்லி, நவ. 25—

சென்னை—திண்டுக்கல் சாலையில் பெண்ணையாற்றின் மீது பாலம் கட்டுதல், பாலாறு மீது பாலம் கட்டுதல் வைகை மீது பாலம் கட்டுதல், திருச்சி காவேரிமீது பாலம் கட்டுதல், சேலம் வட பகுதியில் 18 மைல் தூரத்திற்குச் சிமெண்டு காங்கிரீட் சாலை அமைத்தல், செங்கற்பட்டில் 15 மைல் தூரத்திற்கு வண்டிப் பாதையை விரிவுபடுத்துதல் போன்றவைகளுக்கு 1957-58-ம் ஆண்டு நெடுஞ்சாலை திட்டத்தின் கீழ் ரூ. 42 இலட்சம் செலவிட சென்னை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இந்தியத் துத்தநாகம்

ஐப்பானுக்குப் போவதேன்?

புதுடில்லி, நவ. 24—

செப்டம்பர் மாதம் முடிந்த கால் ஆண்டில் இந்தியாவில் 24,004 டன் ஈயம், துத்தநாகம் ஆகிய கனிகள் உற்பத்திச் செய்யப்பட்டன; இதற்கு முந்திய கால் ஆண்டில் இது 22,095 டன்னாக இருந்ததாம்.

1957-ம் ஆண்டில் மூன்ருவது கால் ஆண்டில் இக்கனிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஈயம், துத்தநாகம் ஆகியவைகளின் அளவுகள் முறையே 1,340 டன்னும் 1,906 டன்னுமாகும். இதற்கு முந்திய கால் ஆண்டில் இந்த அளவுகள் முறையே 1,114 டன்னும், 1,458 டன்னுமாக இருந்தன.

ஈயக் கட்டிகள் பீகார் மாநிலத்திலுள்ள துண்டு என்னுமிடத்திலுள்ள உலைக்கூடத்திற்கு அனுப்பப்படுகிறது. துத்தநாகத்தை உருக்கி சுத்திகரிப்பதற்கான உலைக்கூடம் இந்தியாவிலில்லாததால் அவை ஐப்பானுக்கு அனுப்பப்படுகின்றனவாம்.

இரு போலீசு அதிகாரிகள் நீக்கப்பட்டனர்

இலஞ்ச ஊழல் குற்றத்தின் மீது பலருக்குத் தண்டனை

சென்னை, நவ. 24—

இலஞ்சக் குற்றசாட்டுகளின் மீது செப்டம்பர் மாதத்தில், மருத்துவத்துறை குமாஸ்தா ஒருவரின் பதவி குறைக்கப்பட்டது; வனத்துறை 'ரேஞ்சர்' ஒருவரின் சம்பள உயர்வு குறைக்கப்பட்டது; வனத் துறை கார்டு ஒருவரின் சம்பளம் மாதம் ரூ. 2 வீதம் ஒரு ஆண்டுக்குக் குறைக்கப்பட்டது; ஒரு போலீசு இன்ஸ்பெக்டரும், ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்; வனத் துறை ரேஞ்சர் ஒருவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்.

'இந்தியச் செல்வம்' வெளியீடு

ரூ. 1,75,000 செலவாம்!

புதுடில்லி, நவ. 25—

இந்தியாவின் தாவரங்கள், மிருகங்கள், கனிப் பொருள்கள் முதலிய மூலப் பொருள்களின் விவரங்கள் அடங்கிய 'இந்தியச் செல்வம்' என்னும் வெளியீட்டு வரிசையை வெளியிடுவதற்கு இதுவரை ரூ. 1,75,000 செலவாகியிருப்பதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நெல்லிக்குப்பம் தேர்தல் வழக்கு

நமது கழக அபேட்சகரின் வாதம்

இராமசாமிபடையாச்சியாரின் ஆட்சேபம் தள்ளுபடி

திருச்சி, நவ. 25—

நெல்லிக்குப்பம் தொகுதியில் வெற்றிபெற்ற திரு. இராமசாமி படையாச்சியின் தேர்தல் செல்லாது எனத் தீர்ப்பளிக்கக் கோரி நமது கழக அபேட்சகர் வெ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொடர்ந்துள்ள வழக்கு, நவம்பர் 22-ந் தேதியன்று, திருச்சி தேர்தல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

வழக்கு, முறையாகத் தொடுக்கப்படவில்லை என்று, இராமசாமி படையாச்சியின் வழக்கறிஞர் வாதாடினர்.

நமது அபேட்சகர் தனது வாதத்தை எடுத்துரைக்கையில், முறையாகவே தொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை விளக்கினர்.

நமது அபேட்சகரின் வாதத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி, பிரதிவாதியின் ஆட்சேபணையைத் தள்ளுபடி செய்தார்.

தொடர்ந்து இராமசாமி படையாச்சியின் தேர்தல் செல்லாதெனத் தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கோரி தோழர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வாதாடுகையில், நெல்லிக்குப்பம் தொகுதியில் தனித் தொகுதிக்குப் போட்டியிட்டு வெற்றி பெறற காங்கிரஸ்காரரான தங்கவேல் ஒரு தகுதிபடைத்த வாக்காளர் அல்ல என்பதையும், அவர் கிறித்துவ மதத்தைச் சேர்ந்தவர் என்பதால் தனித் தொகுதியில் போட்டியிடத் தகுதி படைத்தவர் அல்ல என்பதையும் ஆதாரங்களுடன் விளக்கி, அவருக்குக் கிடைத்த வாக்குகள், வீணாக்கப்பட்டுவிட்ட—ஆனல் செல்லத்தக்க வாக்குகள் என்பதால், அவை, இதர அபேட்சகர்களுக்குத்தான் கிடைத்திருக்க முடியும் என்றும் எடுத்துரைத்தார்.

இந்த வாதங்களை எதிர்க்கட்சி வழக்கறிஞர் மறுத்துரைத்தார். என்றாலும், நீதிபதி அவர்கள் நமது அபேட்சகரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, எல்லா வாக்குகளையும் மீண்டும் ஒத்திட்டுப் பார்க்கத் தாம் இசைவதாகக் கூறியதுடன், தனித் தொகுதியில் போட்டியிட தங்கவேல் தகுதியற்றவர் என்பதற்கான வாதங்களைத் தாம் கேட்க விரும்புவதாகக் கூறினர்; நமது அபேட்சகரும் விளக்கினர்.

விவாதம் மீண்டும் 27-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

வழக்கு விசாரணையின்போது, அன்பில்-தருமலிங்கம், திருச்சி-மணி, அழகமுத்து, நெடுமாறன், முத்துகிருஷ்ணன் ஆகியோரும், எண்ணற்ற கழகத் தோழர்களும் நீதிமன்றம் வந்திருந்தனர்.

என். ஜி. ஓ.-வினர் தொழிற்சங்க அடிப்படையில் இயங்குவர்

மதுரை, நவ. 25—

தமிழ்நாடு கெசட் பதிவில்லாத ஊழியர்களின் பேரவைக் கூட்டம் மதுரையில் திரு. ஆள்வாரப்பன் தலைமையில் நடைபெற்றது.

என். ஜி. ஓ.-வினர் சங்கத்தை தொழிற்சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு அதிகாரிகள் மறுத்தால் சங்கம் நீதிமன்றத்திற்குச் சென்று தன் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள தலைவருக்கு முழு அதிகாரம் தரப்பட்டுள்ளது.

ஊழியர்களின் பல குறைகளை தீர்மானங்களின் மூலம் அரசாங்கத்திற்கு மாநாடு வலியுறுத்தியுள்ளது.

ஒருகோடி மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகம்!

மக்களில் ஒவ்வொரு கோடிப் பேருக்கும் ஒரு பல்கலைக் கழகம் வீதம் நிறுவ டெல்லி சர்க்கார் உத்தேசித்திருப்பதாக பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

ராஞ்சி கல்லூரி மாணவரிடை பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்

பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம்

சாதாரண உடலுழைப்பு வேலைகள் செய்ய சக்தியற்ற நபர்களை வைத்திருப்பதற்காக 'பராமரிப்பு விடுதி' விருதுநகர் பாவலி ரோடில் துவக்கப்பட்டதைத் தொடர்ந்து, 1945-ம் ஆண்டின் சென்னை, பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டத்தின்கீழ் நபர்களை விடுதிக்கு ஒப்படைக்கும் அதிகாரங்களை இராமனாதபுரம் மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு அளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் கோரப்பட்டுள்ளது. சட்டத்தின், ஒப்படைப்பு சம்பந்தப்பட்ட விதிகள், விருதுநகர் நகராட்சிப் பகுதியிலும் நகரசபை எல்லையிலிருந்து 5 மைல் வரை உள்ள பகுதிகளிலும் 1958 சனவரி 1-ம் நாளிலிருந்து அமுலுக்குவரும்.

இராசீபுரத்தில் எஸ். எஸ். ராசேந்திரன்

அனாதை விடுதிக்கு நன்கொடையளித்தார்

17—11—57-ல், இராசீபுரம் அனாதை விடுதியின் சார்பில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களுக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. அவ்வமயம், சேலம் நகர சபைத் தலைவர் பி. மதுரை பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்.

தோழர் இராசேந்திரன் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், 'காப்பாற்றுவாரற்றுக் கைவிடப்பட்ட அனாதை சிறுர்களுக்காக இராசீபுரம்வட்டாரத்தை சேர்ந்த ஆர்வமுள்ள நண்பர்களால் நடத்தப்படுகின்ற இந்த அனாதை விடுதிக்கு பெரியவர்கள் நல்ல ஆதரவு தந்தால் நிச்சயம் வளம் பெறும் என்று நம்புகிறேன்; வாழ்க அவர்கள் நல் இதயம்; வளர்க அவர் தம் முயற்சி' என்று குறிப்பிட்டுவிட்டு விடுதிக்கு நன்கொடையாக ரூ. 51 கொடுத்தார்.

வெண்ணுவல்குடி மக்கள் மன்றக் கூட்டம்

23—10—57-ல், மேற்படி மன்றச் சார்பில் தி. மு. கழகக் கொடியை தோழர் ஆ. ம. கருப்பையா ஏற்றிவைத்தார். பிறகு தோழர் ச. பழனிவேலு தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் சி. அழகரசன், இரா. தமிழ்ச்செல்வன், வெ. இளவேலன், இரா. பாலசுப்பிரமணியம், சே. கணேசன், மற்றும் பலர் தி. மு. கழகக் கொள்கைகளைப் பற்றி விரிவுரையாற்றினர்.

வல்லம் தபால்காரர்கள் சங்க ஆரம்ப விழா

வல்லம் ஆர். சி. பாடசாலையில் 13—11—57 மாலை 4 மணியளவில் தோழர் பாபுஜான் தலைமையில் வல்லம் கிளை தபால்காரர்கள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது; தோழர் டி. பாபுஜானை தலைவராகக்கொண்ட செயற் குழு அமைக்கப்பட்டது.

கழகச் செய்திகள்

பெரியகுளம் :

27—10—57-ல், கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் திரு. எஸ். திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது; திரு. வி. வே. குருசாமி அவர்களும் கலந்துகொண்டார்; கழகத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் வாங்குவதென முடிவு செய்யப்பட்டு, தோழர்கள் வி. வே. குருசாமி தலைவராகவும்; ஏ. எஸ். அனீபா துணைத் தலைவராகவும், எஸ். திருவேங்கடம் பொருளாளராகவும்; கே. சோமசுந்தரம், பி. பாண்டியன் செயலாளர்களாகவும்; மு. ராதாகிருட்டிணன், வெற்றிச்செல்வன், செகநாதன் உறுப்பினர்களாகவும் கொண்ட கட்டிடக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்கூட்டத்திலேயே நான்கு தோழர்கள் ரூ. 1,000 தருவதாக வாக்களித்தனர்.

சென்னை 37-வதுவட்டம்

31—10—57-ல், தோழர் கோ. இளவரசு தலைமையில் அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, இவ்வட்டத்தில் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக 'கடைத் தெருச் சாலை' என்று வழங்கி வந்த ஒரு சாலையின் பெயரை 'கௌடியாமடம்' என்ற பெயரில் பஜனை நடத்தி வரும் ஒரு சிலரின் வேண்டுகோளுக்கிணங்கி, இவ்வட்டாரப் பொதுமக்களின் விருப்பத்திற்கு மாருகவும், அவர்களைக் கலந்தாலோசிக்காமலும் 'ஸ்ரீகௌடியா மட் ரோடு' என்று பெயரிட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்ததுடன், மீண்டும் நகர மன்ற ஆணையாளர் அவர்கள் இதுபற்றி புனராலோசனை செய்து, இதுகாறும் வழங்கிவந்த 'கடைத் தெருச் சாலை' என்ற பெயரே இருக்குமாறு அனுமதிக்கக் கோரியும், இது பற்றி பொது மக்கள் அனைவரும் நகர மன்ற ஆணையாளருக்கு அஞ்சல் மூலம் தங்கள் கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் இதற்கு மேலும் நகராண்மைக் கழகத்தார் இணங்கவில்லையானல் பொது மக்களிடம் கையெழுத்து வாங்கி நகர மன்ற ஆணையாளருக்கு நேரிடையாக மனு (மகசர்) கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

திண்டிவனம் :

10—11—57-ல், கழகப் பணிமனையில் தோழர் மு. மாரிசாமி தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, வரவு-செலவுக் கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

எட்டயபுரம் :

11—11—57-ல், தோழர் ப. பிச்சை தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 1—12—57 முதல் கைத்தறித் துணிகளுக்கு சர்க்கார் கொடுத்துவந்த தொகையை (ரிபேட்) ஆறு பைசாவாகக் குறைக்கும் இந்திய சர்க்காரின் முடிவை வன்மையாகக் கண்டித்ததுடன், இனியும் தொடர்ந்து இப்பொழுது கொடுத்துவரும் 9 பைசாவையே கொடுத்துவர வேண்டுமென்றும் மத்திய—மாகாண சர்க்கார்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டதுடன் நெசவாளர்களின் இக்கோரிக்கையை சர்க்கார் ஏற்கத் தவறினல் நெசவாளர்கள் கிளர்ச்சி செய்ய நேரிடும் என்றும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது; மற்றும் எட்டயபுரத்தில் பெரும் பரபரப்பையுண்டு பண்ணியிருக்கும் கண்மாய்ப் பிரச்சினைபற்றியும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆமதாபாத்-மணிநகர் :

10—11—57-ல், தோழர் வி. நாகராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 24—10—57-ல், நடந்த மணிநகர் வட்ட தி. மு. கழக 5-வது ஆண்டு விழாப்பொதுக்கூட்டத்தின் வரவு-செலவுக கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. கா. அப்பாதுரையார் பொன்விழாவிற்கு வசூல்செய்த பணத்தை அனுப்பிவைப்பது என்றும், வரும் 14-1-58-ல், தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், க. அன்பழகன் எம். எல். ஏ. ஆகியவர்களை அழைத்து, ஒரு சிறப்புக் கூட்டம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பம்பாய் :

பம்பாய் தி. மு. கழக மத்தியக் குழுக் கூட்டம் 20—10—57-ல், தாராவி திராவிடரகத்தில், தோழர் பி. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்றபோது, கிளைக் கழகத் தேர்தல்களை டிசம்பர் முதல் கிழமையில் நடத்தக் கோரி செயலாளர் எஸ். தியாகராசன் அவர்களை வேண்டிக்கொண்டதுடன், மற்றும் பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

திருமங்கலம் :

தோழர் மன்னர் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், நகர கழக வளர்ச்சியை முன்னிட்டு பல முக்கிய முடிவுகள் செய்யப்பட்டன.

ஆத்தூர் :

7—10—57-ல், கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் கே முத்து தலைமையில் நடைபெற்றது; அவ்வமயம் 23—10—57-ல் நடைபெற்ற பொதுக் கூட்ட வரவு-செலவுக் கணக்குகள் சரி பார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

சென்னை 21-வது வட்டம்

22—10—57-ல் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், கலைவாணர் என். எஸ். கே., தாளமுத்து 21-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர் பெருமான் அவர்களின் குழந்தை ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் புதிய நிர்வாகக் குழு அமைக்க மாவட்டத் துணைச்செயலாளரின் அனுமதியைக் கோரியும், திராவிடர் திருநாள் கொண்டாடுவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேகல்மடப்புரம் :

29—10—57-ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழகத்திற்கென ஒரு கட்டிடம் விரைவில் கட்டுவதெனவும், கழகத்திற்குத் தேவையான சில்லறை பொருள்கள் வாங்குவதெனவும், மற்றும் பல முடிவுகளும் செய்யப்பட்டன.

லா. தா. மணக்கால் :

29—10—57-ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கலைவாணர் என். எஸ். கே., கண்ணதாசன் தாயார், அன்பில் தர்மலிங்கம் தாயார், பொதுச் செயலாளர் அவர்களின் மாமனர் மாநில கவர்னர் ஜான் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், இந்தித் திணிப்பைக் கண்டித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருத்தம்

'நம்நாடு' சென்னை 2—11—57 இதழில் 4-வது பக்கத்தில் 'கழகக் கூட்டம்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ள தேவகோட்டை நிகழ்ச்சியில் 'திருச்சி வாசுகி கலா மன்றத்தாரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்' என்ற தவறான செய்தி இடம் பெற்றுவிட்டமைக்கு வருந்துகிறோம்.

சோழவந்தானில் நெடுஞ்செழியன் படிப்பக ஆண்டுவிழா

3—10—57 காலை 10 மணியளவில், தோழர் மா. வேலவன் தலைமையில், தோழர் எஸ். பழனியாண்டவன் கொடியேற்றினர்; தோழர் மெய்யன்பன் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

மாலை 6 மணியளவில் படிப்பகத்தின்முன் மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் எஸ். பழனியாண்டவன் தலைமையில் நடைபெற்றது. தோழர் கி. மனோகரன் அவர்கள் இந்தி இந்த நாட்டுக்குத் தேவைதானு என்பது பற்றியும், தி. மு. க. பற்றி அமைச்சர்களின் முறைதவறிய பேச்சைக் கண்டித்தும் உரையாற்றினர்.

பிறகு தோழர் எஸ். மெய்யன்பன், எஸ். முத்து ஆகியோர் இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற கலவரம் குறித்து ஆளும்கட்சியினர்நடந்துகொண்ட விதத்தை எடுத்துக் கூறினர். முடிவில் படிப்பகச் செயலாளர் ஆண்டு அறிக்கை வாசித்தபின் கூட்டம் முடிவுற்றது.

என். எஸ். கே. நினைவு மன்றம் துவக்க விழா

19—11—57 மாலை 6 மணிக்கு சென்னை 11-வது வட்டம் சாலை விநாயகர் கோயில் தெருவில், தோழர் ப. த. ஜனநாயகம் தலைமையில் தோழர் என். இராமதாஸ் மேற்படி மன்றத்தைத் திறந்துவைத்தார். என். எஸ். கே. அவர்களின் உருவப்படத்தைத் தோழர் கோதண்டராமன் திறந்துவைத்தார். பின்னர், கலைவாணரின் சேவைகளைப்பாராட்டி பல தோழர்கள் பேசினர்.

ஆசிரியர்பயிற்சிப்பள்ளி இலக்கியக் கூட்டம்

மாயனூர் அரசினர் ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் இலக்கிய மன்றச் சிறப்புச் சொற்பொழிவு தோழர் மு. குழந்தைவேல் தலைமையில் 20—11—57ல் நடைபெற்றது. புதுக்கோட்டை மாவட்ட கல்விக் கண்காணிப்பாளர் ஆதாரப் பயிற்சியின் தத்துவம் குறித்தும், திருமதி ச. தனபாக்கியம் 'இலக்கிய கால மகளிர்' எனும் பொருள் பற்றியும், தோழர் நாவரசன் 'தமிழ் நேற்று-இன்று-நாளை' எனும் பொருள் குறித்தும், தோழர் மீ. சு. இளமுருகு 'குறளோவியம்' எனுந் தலைப்பிலும் பேசினர்.

வழியனுப்பு

கும்பகோணம், நவ. 22—

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கம், நாகப்பட்டினம் கிளையின் தலைவர் குடவாசல் தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், மதுரை டிவிஷன் சங்க அமைப்புச் செயலாளர் கே. எஸ். இராமசாமிக்கும், கும்பகோணம் இரயில் நிலையத்தில், கும்பகோணம் இன்ஸ்பெக்டர்கள் இன்று வழியனுப்பு நடத்தினர். இவர்கள், பம்பாயில் நடக்கும் இருதரப்பு மாநாட்டில் கலந்துகொள்ளச் செல்கின்றனர்.

மறைவு

ஆரம்பக் கல்வித்திட்ட எதிர்ப்பு அறப்போரில் பங்குகொண்டவரும், கழகச் செயற்குழு உறுப்பினருமான தோழர் எம். புட்பநாதன் அவர்கள் துணைவியார் தோழியர் சகுந்தலா 21-11-57ல் மறைவெய்தியமைக்கு சேவூர் தி. மு. கழகத் தோழர்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

விருதுநகர் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர் ஜி. பொன்னுச்சாமி 17—11—57-ல் இயற்கையெய்தியமைக்கு நகர தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வெற்றிபெற்ற கழக அபேட்சகருக்கு எதிராக காங்கிரஸ் அபேட்சகர் தொடுத்த வழக்கு

தள்ளுபடி செய்து வழக்குச் செலவைத் தரும்படி நீதிபதி உத்தரவு

கள்ளக்குறிச்சி தேர்தல் வழக்கு விவரம்

நாகப்பட்டினம், நவ. 21—

கள்ளக்குறிச்சி இரட்டை உறுப்பினர் தொகுதியில் வெற்றி பெற்ற நமது கழக அபேட்சகர்கள் சி. நடராசன் (பொது), எம். ஆனந்தன் (ரிசர்வ்) ஆகியோர் வெற்றி பெற்றதற்குக் களங்கமும், மாசும் கற்பிக்க எண்ணி, காங்கிரஸ்காரர் எடுத்துக் கொண்ட முயற்சி தூள்தூளாக உடைந்தது. நமது கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதே செல்லத்தக்கது என்றும், நமது கழக உறுப்பினர்களுக்குச் செலவுத் தொகை கொடுக்க வேண்டும் என்றும் காங்கிரஸ்காரர்களுக்கு நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

வழக்கு விவரம்:

கள்ளக்குறிச்சி இரட்டை உறுப்பினர் தொகுதியில் வெற்றி பெற்ற கழக உறுப்பினர்கள் தோழர்கள் சி. நடராசன் (பொது), எம். ஆனந்தன் (ரிசர்வ்) தேர்தல் செல்லத்தக்கது அல்ல—என்று தோற்றுப்போன காங்கிரஸ் அபேட்சகர் பார்த்தசாரதி (நாயுடு), நாகப்பட்டினம் தேர்தல் விசாரணை மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

“வெற்றி பெற்ற தி. மு. கழக அபேட்சகர்களுக்கு செல்லுபடியாகாத வாக்குகள் எல்லாம் செல்லுபடியாக்கப்பட்டிருக்கின்றன; இதற்குக் காரணம், வாக்குகளை எண்ணிய அதிகாரிகள் தி. மு. கழக அனுதாபிகளாக இருந்ததுதான்; ஆகையால் மீண்டும் ஒரு முறை வாக்குகளை எண்ணினால் நான்தான் வெற்றி பெறுவேன். ஆகவே, மீண்டும் எண்ண உத்தரவிடவேண்டும்” என்று மனுவில் காங்கிரஸ் அபேட்சகர் கூறியிருந்ததை டிரிபியூனல் நீதிபதி ஏற்றுக்கொண்டு, வாக்குச் சீட்டுகளை எண்ண உத்தரவிட்டார்.

அதன்படி எண்ணியதில், முன்பு கிடைத்த வாக்குகளைவிட இந்த முறை 3 வாக்குகள் அதிகம் பெற்று நமது அபேட்சகர் வெற்றி பெற்றார் என்று உறுதி செய்யப்பட்டது. இந்த முதல் குற்றச்சாட்டில் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வி கண்டார்.

அடுத்த குற்றச்சாட்டில் தேர்தல் தினத்திற்கு முன் 8—3—57 அன்று இரவு கச்சராபாளையத்தைச் சேர்ந்த சுமார் 200 வாக்காளர்களை மில் முதலாளியான இளையபிள்ளை என்பவர் மில்லில் அடைத்து, அவர்களுக்குத் தின்பண்டங்களும் பாலும் கொடுத்து, ‘தி. மு. கழக அபேட்சகர்களுக்கே ஓட்டுபோட வேண்டும்; பாலைக் குடித்துவிட்டு துரோகம் நினைக்கக்கூடாது’ என்றும் கூறி ஓட்டு வாங்கியதாகக் கூறப்பட்டது.

சென்ற பொதுத் தேர்தலில் தோழர் பார்த்தசாரதி நாயுடுவும், தோழர் இளையபிள்ளையும் போட்டியிட்டதில் பார்த்தசாரதி நாயுடு தோல்வியடைந்ததாகவும், அதன் பிறகு தேர்தல் வழக்கு மன்றத்தில் இளையபிள்ளையின் தேர்வை ஆட்சேபித்து வழக்கு போட்டு மறுதேர்தலில் தோழர் பார்த்தசாரதி வெற்றி பெற்றார் என்றும், அதனால் இருவருக்கும் விரோதம் இருந்துவந்ததாகவும் சாட்சியங்களில் கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின் மீது நீதிபதி தீர்ப்புக் கூறும்போது, “மனுதாரின் சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவில் இல்லை என்பதால் இந்தக் குற்றச்சாட்டைத் தள்ளுபடி செய்து, மனுதார் பார்த்தசாரதி நாயுடு தி. மு. கழக அங்கத்தினர் தோழர் சி. நடராஜனுக்கு செலவுத் தொகை ரூ. 250 கொடுக்க உத்தரவிடுகிறேன்” என்று கூறினார்.

அடுத்து, ரிசர்வ் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் ஆனந்தன் மீதும் தோழர் பார்த்தசாரதி நாயுடு மனு கொடுத்திருந்தார்; அதில் குறிப்பிட்டதாவது:—

“நாமினேஷன் பத்திரத்தில் வெற்றி பெற்ற எம். ஆனந்தன் தன்னை இந்து அரிஜன் என்று குறிப்பிட்டிருக்கிறார்; ஆதித்திராவிடர் என்று குறிப்பிடாததால் சட்டப்படி செல்லாது” என்று பார்த்தசாரதி சார்பில் கூறப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டின்மீது நீதிபதி தீர்ப்புக் கூறுகையில், எம். ஆனந்தன் ஆதித்திராவிடர் என்பதை யாரும் மறுக்கவில்லை—நாமினேஷன் பரிசீலனையின் போது யாரும் இதை ஆட்சேபிக்கவும் இல்லை என்பதாலும், பொதுவாக ஆதித்திராவிடரை ‘அரிஜன்’ என்று அழைக்கப்படுகிறது என்பதாலும், ஆகவே ஆனந்தனின் நாமினேஷனை ஏற்றுக்கொண்டதில் பெரிய தப்பு ஒன்றும் இல்லை என்றும் கூறி, பார்த்தசாரதியின் மனுவைத் தள்ளுபடி செய்து, செலவுத் தொகையாக ஆனந்தனுக்கு பார்த்தசாரதி நாயுடு ரூ. 100 கொடுக்கும்படி உத்தரவிட்டார். (ந-கி.)

பர்மா இந்தியர் குறைகள்

கவனிக்க தனிக் குழு

பண்டித நேருவிடம் பர்மாவிலுள்ள இந்தியர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைத்ததின் காரணமாக, பர்மா பிரதமர் யூ-நூ ஒரு தனிக்குழு அமைத்து இந்தியர்களின் குறைகளை ஆராய ஏற்பாடு செய்துள்ளார்.

சிங்கப்பூர் வாழ் இந்தியருக்குக் குடியுரிமை

இந்திய அரசாங்கத்தின் வாக்குறுதி

யாரும் தயக்கமின்றி சிங்கப்பூர் குடிமக்களாகலாம்

சிங்கப்பூர், நவ. 25—

காமன்வெல்த் நாடுகளில் முதன்முதலாக, இந்தியா சிங்கப்பூர் குடியுரிமையை அங்கீகரித்து, இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கும் வசதியளிப்பதாக உறுதி அளித்துள்ளது. இந்தத் தகவலை இங்குள்ள இந்திய அரசாங்க அலுவலகம் அறிவித்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள இந்தியர்களுக்கு இந்த உறுதிமொழி நன்மையை உண்டாக்கியுள்ளது.

சிங்கப்பூரில் குடியுரிமை ஏற்றவர்கள்கூட இந்தியாவுக்கு வரவும் உரிமைகளை இழக்காமல் இருக்கவும் வசதியளிக்கப்படுள்ளது.

இப்போது இந்தியா—சிங்கப்பூர் பிரயாணத்திற்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை.

சிங்கப்பூரில் உள்ள கணவன்மார்களின் மனைவிகள் இந்தியாவில் இருந்தால் அவர்களுக்கும் சொத்துரிமை. வாரிசு உரிமை தரப்பட்டுள்ளது.

பிரெஞ்சுப் பிரதமருக்கு தம் கட்சியில் தோல்வி

அல்ஜீரியப் பிரச்சினை பற்றிய மாஜி பிரதமரின் தீர்மானத்திற்கு வெற்றி

பிரெஞ்சுப் பிரதமர் பெலிக்ஸ் கெய்லார்டு, தமது சர்க்காரின் அல்ஜீரியக் கொள்கைக்கு, தமது கட்சியில் வெற்றிபெற முடியவில்லை.

ஸ்ட்ராஸ்பர்க் எனும் இடத்தில் நடைபெற்ற ரேடிகல் சோஷலிஸ்டுக் கட்சி மகாநாட்டில் சர்க்கார், அல்ஜீரியாவைப் பொறுத்து மேற்கொண்டுவரும் இப்போதையக் கொள்கையை ஏற்க மறுத்துவிட்டு, பெரும்பான்மையான பிரதிநிதிகள், முன்னையப் பிரதமர் மென்டே பிரான்ஸ் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

மென்டே பிரான்சின் தீர்மானம், அல்ஜீரியப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு டுனீஷிய, மொராக்கோ நாட்டு சர்க்கார்கள் ஒத்துழைப்புத்தர முன்வந்திருப்பதை சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஆனால், புதிய பிரதமர் கெய்லார்டு கடைப்பிடித்துவரும் கொள்கை, தொடர்ந்து அல்ஜீரிய விடுதலைக் கிளர்ச்சியை அடக்கவேண்டும் என்பதாகும்.

மென்டே பிரான்ஸ் பிரதமராயிருந்த காலத்தில், இரண்டு ஆண்டுகளுக்குமுன், டுனீஷியாவிற்கு விடுதலை கிடைக்கச் செய்தார் என்பது நினைவிலிருக்கலாம்.

உரிமைக் கோரிக்கையை உலகினர் அறிய!

இந்தோனேஷிய மக்கள் மேற்கொண்ட முறை

ஜகார்த்தா, நவ. 25—

டச்சு மேற்கு கினியாவுக்காக இந்தோனேஷியா போராடி வருவது தெரிகிறதல்லவா?

இதை உலகுக்கு அறிவிக்க, வெளிநாடுகளில் வசிக்கும் இந்தோனேஷியர்கள் உள்பட 8,20,00,000 பேர் இன்று நண்பகல் சில நிமிடங்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

பஞ்சாயத்துத் தேர்தல்

கழகத் தோழர்கள்வெற்றி

17—10—57-ல் நடந்த புதுப்பேட்டை-கோட்லாம்பாக்கம் (தெ.ஆ.மா.) பஞ்சாயத்துபோர்டு தேர்தலில் கழக உறுப்பினர்களான தோழர்கள் பி. கே. ஆர். பரதன், என். அப்பாய் ஆகியோரும், கழக ஆதரவாளரான வி. துரைசாமி அவர்களும் வெற்றிபெற்றுள்ளனர்.

★

திருவதிகை பஞ்சாயத்து

துணைத் தலைவராக கழகத் தோழர் தேர்வு

20—11—57-ல் நடைபெற்ற பண்ணுருட்டிக்கு அடுத்த திருவதிகை கிராமப் பஞ்சாயத்துத் துணைத் தலைவர் தேர்தலில் தி. மு. கழக உறுப்பினர் தோழர் சி. இராசமாணிக்கம் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பு. புளியம்பட்டியில் நாடகங்கள்

28-11-57 இரவு 10-மணிககு பு. புளியம்பட்டி சண்முகா டாக்கீசில் நகர தி. மு. கழக நிதிக்காக தோழர் பி. கே. பழனிச்சாமி தலைமையிலும் தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. முன்னிலையிலும ‘நச்சுக்கோப்பை’, ‘அனார்கலி’ ஆகிய நாடகங்கள் இளைஞர் கலை மன்றத்தாரால் நடிக்கப்பெறும்.

என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

நவம்பர்

28: மேலக்குண்டூர் (திருக்கோவிலூர்)

29: பட்டுக்கோட்டை

30: அறந்தாங்கி

டிசம்பர்

1: பல்லடம்
மாலை 3 மணி-கே. வி. கே. சாமி நினைவு மன்றத் துவக்க விழா;
மாலை 6 மணி-கழகக் கூட்டம்

கழகத் தோழர்கள் கவனிக்க:

நாஞ்சில் மாவட்ட மாநாடு டிசம்பர் திங்கள் 27, 28-ந் தேதிகளில் நடைபெறவிருக்கின்றது. கழகத் தோழர்கள், மாநாடு முடியுமட்டும் கூட்டங்களுக்கு அழைப்பு விடுக்காமலிருக்க அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அன்பன்
கி. மனோகரன்

முத்து அச்சகத் துவக்க விழா

28-11-57 மாலை 4-மணியளவில், மதுரை - மேலக்கோபுரத் தெரு, 66-எண்ணுள்ள கட்டிடத்தில் முத்து அச்சகத் துவக்கவிழா டாக்டர் அருணசலம் தலைமையில் நடைபெறும்; தோழர் டி. கே. சீனிவாசன் சிறப்புரையாற்றுவார். அனைவரும்வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுமென மதுரை எஸ். முத்து அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

பம்பாய் மெயில் விபத்து

மக்கள்சபையில் இரயில்வே மந்திரி அறிக்கை

புதுடில்லி, நவ. 25—

இகத்பூரி அருகே, பம்பாய்-கல்கத்தா மெயில் வண்டிக்கு ஏற்பட்ட விபத்துபற்றி இரயில்வே மந்திரி செகசிவன்ராம் இன்று மக்கள்சபையில் ஒரு அறிக்கை தந்திருக்கிறார்.

விபத்தினால் உயிரிழந்தவர்கள் 9 பேர் என்றும், காயமுற்றோர் 41 பேர் என்றும், இவர்களில் எவரும் இறந்துவிடுவார்களோ என்ற அச்சம் இல்லை என்றும், கவிழ்ந்த 4 பெட்டிகளும் மூன்றும் வகுப்புப் பெட்டிகளாயிருந்தால், உயிர்ச்சேதம் அதிகமாயிருந்திருக்கும் என்றும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தோரின் உறவினர்களுக்கும், காயம்பட்டோருக்கும் உடனடி நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்திருப்பதாயும், அவர்களுக்கு நஷ்டஈடு பின்னர் கணக்கிட்டுத் தரப்படும் என்றும் கூறியுள்ளார்.

விபத்துபற்றி இரயில்வே அதிகாரியின் விசாரணை தொடங்கிவிட்டது என்றும், விபத்து நடந்த இடத்தைப் பார்க்கும் எந்த ஒரு சாதாரண மனிதருக்கும் விபத்தின் காரணத்தை எளிதில் புரிந்துகொள்ளமுடியும் என்றும் மந்திரி கூறினார்.

மந்திரி ஏற்கனவே, இரயில், விபத்துக்காளானதற்குக் காரணம் நாசவேலைதான் என்று கூறியதைப்பற்றிச் சில உறுப்பினர்கள் கேட்டபோது, விபத்திற்கான காரணத்தைத் தாம் இப்போது கூறுவதற்கு இல்லை என்றும் விசாரணை முடிந்தபின் அது நிர்ணயிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

இரயில்வே பாதைகளைப் பாதுகாப்பது என்பது மிக முக்கியமானது என்பதில் சந்தேகம் இல்லை என்றும், ஆனால் ஒவ்வொரு அங்குல பாதையையும் பாதுகாத்துக் கொண்டிருப்பது சாத்தியமில்லை என்றும், ஆனால், தற்காலிகமாக விபத்து நடந்த இடத்தைத் தொடர்ந்துள்ள பாதைகளை இரவில் ‘பாரா’ போட்டு பாதுகாக்கத் தாம் உத்தரவிட்டிருப்பதாயும் கூறினார்.

கழகக் கூட்டங்கள்

★

சின்னத்தம்பிபாளையம்
(திருச்செங்கோடு வட்டம்)
மாரியம்மன் கோவில் அருகில்
28—11—57 மாலை 5½மணிக்கு
தலைவர்: என். ஏ. நடேசன்
பேசுவோர்:
என். எஸ். இளங்கோ
எஸ். அப்பாவு

★

கூகூர்:
(லால்குடி வட்டம்)
28—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: வே. இராசு
பேசுவோர்:
சிற்றுளி-சுப்பிரமணியம்
எஸ். நெடுமாறன்

திருக்குறள் வகுப்பு

27-11-57 மாலை 6-30 மணிக்கு சென்னை மணவழகர் மன்றத்தின் சார்பில், பெத்துநாய்க்கன் பேட்டை. எண்-2 இல்லத்தில், புலவர் கா. தி. தனக்கோட்டி அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறும்.

“அன்னை” நாடகத் துவக்கம்

27—11—57 மாலை 6 மணியளவில், சென்னை எழும்பூர் போர்ச்சுகீஸ் சர்ச்சு தெரு, 179 எண்ணுள்ள இல்லத்தில் தோழமை நாடக மன்றத்தின் சார்பில் திருமதி சத்தியவாணிமுத்து எம். எல்.ஏ. தலைமையில் ஆர். ஜார்ஜ் எழுதிய “அன்னை” என்னும் நாடகத்தின் துவக்கவிழா நடைபெறும்.

மதுரை அன்பகப் படிப்பக பொதுக் கூட்டம்

28—11—57 இரவு 7 மணியளவில், மதுரை நாயக்கர் புதுத் தெரு 39-ஏ, எண்ணுள்ள இல்லத்தில் வழக்கறிஞர் பி.கே. சேதுராமன் தலைமையில் அன்பகப் படிப்பகத்தின் சார்பில் ஓர் கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ். முத்து, அரசுக்கண்ணன், சி. உலகநாதன் ஆகியோர் பேசுவர்.

நிபந்தனையை ஏற்க எகிப்து மறுப்பு

கெய்ரோ, நவ. 25—

பிரிட்டன் வசமுள்ள எகிப்தின் ‘ஸ்டர்லிங்’ நிலுவையை விடுவிப்பதுபற்றி இருநாடுகளுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

210 இலட்சம் பவுனை மட்டும் விடுவிக்க பிரிட்டன் சம்மதித்துள்ளது; ஆனால், இந்தத் தொகையில் 70 இலட்சம் பவுனை, எகிப்தில் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் ஸ்தாபனங்களுக்கு நஷ்டஈடாகத் தரவேண்டும் என்று நிபந்தனை கூறப்பட்டுள்ளது.

இந்த நிபந்தனையை எகிப்து ஏற்கவில்லை.

அமெரிக்க உதவிபற்றி இந்தியத் தூதுவர்

கல்கத்தா, நவ. 25—

அமெரிக்காவில் இந்தியாவின் தூதுவராக உள்ள திரு. மேதா இந்தியா வந்துள்ளார்.

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அமெரிக்கா உதவிபற்றி அவரிடம் கேட்கப்பட்டது.

‘டிசம்பர் 3-ந் தேதி நடைபெறும் அமெரிக்கப் பேரவையின் அனுமதி கிடைத்த பின்னரே அமெரிக்க உதவிபற்றி முடிவான தகவல் தெரியும்’ என்று அவர் கூறியுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.